ராசப்பையன் சாவடி, தென்கரவயல், எளச்சேரி, கீழப்பட்டு, நாவல்புண்டி, காளஞ்சிமேடு, சோளாப்பேட்டை, வடகரவயல் ஆகிய கிராமங்களிலுள்ள மக்களும் இதே பிரச்சினையால் அவதிப்படுகிறார்கள். எனவே, அந்தந்த இடங்களிலும் கால்நடை மருத்துவமனையை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை உறுப்பினர் அவர்கள் எடகீழையூர் கிராமத்திலே கால்நடைக் கிளை நிலையம் வேண்டுமென்று கேட்டார்கள். அங்கே துறையின் சார்பாக திருவாரூர் R.J.D. அவர்கள் ஆய்வு செய்ததிலே, அதன் அருகிலுள்ள எடமேலையூரிலே ஒரு கால்நடை மருந்தகம் இருப்பதால், கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை எனத் தெரிவித்தார். மேலும், உறுப்பினர் அவர்கள் செருமங்கலம் கிராமத்திலே ஒரு கிளை நிலையம் கேட்டிருந்தார்கள். கால்நடை பராமரிப்புத் துறையின் விதிகளுக்குட்பட்டு, அதிகமாக கால்நடைகள் இருப்பதால், அங்கே அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. அங்கே விரைவில் அதை அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 101, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

101—

சுற்றுலாத் தலம்

***5507—திரு. ஏ. லாசர்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 10]

(அ) பெரியகுளம் தொகுதி, கும்பக்கரை அருவிப் பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், கும்பக்கரை அருவிப் பகுதி, சுற்றுலாத் துறையின் மூலமாக சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்படுமா என்ற கேள்விக்கு தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) சுற்றுலாத் துறையின்மூலம் தமிழ்நாட்டிலுள்ள எந்த ஒரு குறிப்பிட்ட இடத்தையும் சுற்றுலாத் தலம் என அறிவிப்பதில்லை. இருப்பினும், ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் அவ்விடத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, மாவட்ட ஆட்சியரின் பரிந்துரை, கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் ஆகியவற்றின் அடிப்படையில், அவ்விடத்தில் தேவையான சுற்றுலா அடிப்படை வசதிகளை மேற்கொள்ள சுற்றுலாத் துறை நிதி ஒதுக்கீடு வழங்கி வருகிறது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, 2012–2013 ஆம் ஆண்டு மாநில அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ் அரசாணை (நிலை) எண் 213, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, நாள் 29–11–2012–ல் தேனி மாவட்டம், கும்பக்கரை அருவிப் பகுதியில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ள ரூபாய் 44 இலட்சம் மாண்புமிகு அம்மா அவர்களால் நிதி ஒப்பளிக்கப்பட்டு, மொத்தமுள்ள 10 பணிகளில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான உடை மாற்றும் அறைகள் கட்டுதல், ஆழ்குழாய்க் கிணறு தோண்டி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல், குடிநீர் வசதி ஏற்படுத்துதல், கழிப்பறை கட்டுதல், நடைபாதை அமைத்தல், அருவிக்குச் செல்வதற்கு கைப்பிடிக் கம்பிகள் அமைத்தல், ஓய்வுக் கூடம் அமைத்தல், மின்சார வசதி ஏற்படுத்துதல், ஆபத்தான பள்ளங்களை மூடுதல் மற்றும் விளம்பரப் பலகை நிறுவுதல் ஆகிய 8 பணிகள் நிறைவு பெற்றுள்ளன. மீதமுள்ள காட்சிக் கோபுரம் அமைத்தல், தடுப்பு வேலி அமைத்தல் ஆகிய 2 பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா

அவர்களின் நல்லாட்சியில் சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்கு வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெரியகுளம் தொகுதியிலுள்ள கும்பக்கரை அருவி ஓர் இயற்கையான நீர்வீழ்ச்சி. கொடைக்கானல் அடிவாரத்தில் இருக்கக்கூடிய, ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் பார்வையிடக்கூடிய அற்புதமான இயற்கைக் காட்சி நிறைந்த இடம். சுற்றுலாப் பகுதி என்று அறிவிக்கப்படாத சூழ்நிலையிலேயே இங்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்துகொண்டிருக்கின்றார்கள். எனவே, அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இது அதிகமான எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகள் வரக்கூடிய இடமாக இருக்கிறது. ஒரு பகுதி forest-ஆக இருப்பதனால், அதற்கு தடை இருக்கின்றது. பக்கத்தில் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடங்களும் இருப்பதனால், தமிழக அரசினுடைய கட்டுப்பாட்டில் உள்ள அந்த இடங்களில் இன்னும் சில நவீன வசதிகளைச் செய்து கொடுக்கிறபொழுது, அங்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. பயணிகளை ஈர்க்கத் தகுந்த இது போன்ற இடங்கள் இந்தியாவில் சிலதான் இருக்கின்றன. அந்த இடத்தை சுற்றுலாத் தலமாக அறிவிக்க கூடுதல் முயற்சி எடுத்து, பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான பகுதியில் மக்கள் தேவைக்கான வசதிகளை செய்து கொடுப்பது மக்களுக்கு இன்னும் உதவியாக இருக்கும். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக்*

கருத்தில்கொண்டு, தேவையான சுற்றுலா அடிப்படை வசதிகளை மேற்கொள்வது குறித்து தொடர்புடைய ஆட்சித் தலைவரின் பரிந்துரையின்பேரில், விரிவான திட்ட மதிப்பீடு மற்றும் கருத்துரு தயாரிக்கப்பட்டு, சுற்றுலாத் துறையின்மூலம் நிதி ஒதுக்கீடு செய்து, அவ்விடத்தினை சுற்றுலாத் தலமாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு அறிவிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

திரு. ஏ. லாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய சோத்துப்பாறை, மஞ்சளாறு ஆகிய இரண்டு அணைப் பகுதிகளையும் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுமென்று நான் ஏற்கெனவே இங்கே கேள்வி எழுப்பி இருந்தேன். அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். இதனை கூடியவிரைவில் அறிவித்தால், சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வந்து செல்வதற்கு உதவியாக இருக்கும். அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கருத்துருவினைப் பெற்று, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுசென்று, நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 102, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.